தமிழீழ வாலிபர் பலர் ஒன்று கூடி அன்று
தமிழீழ விடுதலை அணி ஒன்று உருவாக்கி
ஏகமனதாய்ப் பலர் ஏற்குமாறழுத்தவே
மோகமற்று அதன் தலைமையை ஏற்று
நடுநாயகமாய்த் தமிழர் ஒற்றுமை நலம் பேணி
இனத்துக்காய் தமிழுக்காய் இயன்ற தனைச் செய்து
மனத்தினால் இன்றும் மழலைக்குணத்துடனே
தள்ளாடும் வயதிலும் தளராத நெஞ்சுடன்
உள்ளத்தா லுயர்ந்து எண்ணத்தால் பரந்து
எண்ணற்ற சம்பவங்கள் இதயத்தில் அழுத்திவைத்து
பண்புடன் வருவோர்க்கும் பகிர்ந்தளித் தளவளாவி
மண்ணையும் மாண்புள்ள இனத்தையும் தன்னிரு
கண்மணிகளாய்க் காலமெல்லாம் எண்ணி
அன்னிய தேசமான ஆங்கில நாடு வந்தும்
கன்னித் தமிழீழம் காணத்துடித்து வாழும்
பொன்மனச் செம்மலை புகழ் விரும்பாப் பெருந்தகையை
அன்னத்தால் இன்றும் அன்புகாட்டி அனுசரிக்கும்
தன்னலமற்ற தர்மலிங்கம் ஐயாவைத் தமிழரெல்லாம்
இன்னுயிராய் மதித்து இதயத்தில் இடங்கொடுத்து
இனிவரும் சந்ததிக்கும் இவர்பற்றி எடுத்தியம்பி
கனிவான குணமகனைக் கனம் பண்ண லெம்பணியே.



# டாக்டர் தருமலிங்கம் அவர்களின் தமிழீழ சிந்தனைகள்

ஐ. தி. சம்பந்தன்

50 வருடங்களுக்கு மேலாக தமிழ் இன விடுதலைக்கும், உயர்வுக்கும் பல்வேறு துறைகளில் பணியாற்றிய டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் அவர்கள் 87 வயதிலும் அந்த விடுதலை உணர்வு குன்றாது கூறிய நினைவுத் திரைகள்.

பிரபாகரன் ஒரு தேவையான தலைவன். அவருக்கு எல்லாப்பக்கத்தாலும் கரச்சல் உண்டு. எப்படியும் ஈழப் போராட்டம் வெற்றி பெறும். ஈழம் தான் முடிந்த முடிவு.

நான் மடிவதற்கு முன் ஈழம் கிடைத்தால் அந்த மண்ணில் மடிவதையே பெரிதும் விரும்புவேன். தந்தை செல்வா நேர்மையான அரசியல் தலைவன். அவரில் நான் ஒரு குறையும் சொல்ல மாட்டேன். தமிழரசுக்கட்சியில் முன்னோடித் தலைவர் திரு. வன்னிய சிங்கம் உயிர் பிரியும் போது அருகில் இருந்தேன். அவருக்கு இதய நோய் இருந்தது. ஓய்வாக இருக்கும்படி கூறினேன். கேளாமல் தமிழ் இனப் பணியில் ஈடுபட்டார். இதய நோயுடன் நீதி மன்ற வழக்கொன்றிற்கு சென்றார். அன்றே இதய நோய் அவரைத் தாக்கியது. என்னை அழைத்தார்கள். எல்லா முயற்சியும் மேற்கொண்டும் அவர் உயிரைத் தப்ப வைக்க முடியவில்லை. அவர் இழப்பு தமிழ் இனத்திற்கு பேரிழப்பாக முடிந்தது.

யாழ்ப்பாண மேயராக இருந்த போது அல்பிரட் துரையப்பா எம் பியாக இருந்தார். எனது மேயர் பணிகளைச் செவ்வனே செய்வதற்கு பல முட்டுக்கட்டைகள் போட்டார். எல்லாவற்றையும் சமாளிக்க வேண்டியிருந்தது.

இன்று Hot Spring ஆசிரியராகவிருக்கும் திரு. சிவநாயகம் யாழ்ப்பாணத்தில் Saturday Review ஆசிரியராக இருந்த போது அவர் உயிருக்கு ஆபத்து நிகழவிருந்தது. இலங்கை C.I.D அவரைக் கொழும்புக்கு கொண்டு செல்லத்திட்டமிட்டிருந்ததை அறிந்தேன். அவரை இந்தக் கெடுபிடிகளிலிருந்து தப்ப வைக்க நினைத்தேன். அவரை யாழ்ப்பாணத்திலிருந்து தப்பி இந்தியா செல்லும்படி ஆலோசனை கூறினேன். அவ்வாறு அந்த ஒழுங்குகளை மறைமுகமாகச் செய்தோம். அதற்கு திரு. ஐ. தி. சம்பந்தனும் பிரயாண ஒழுங்கில் உதவினார். அன்று உயிர் தப்பி இந்தியா சென்று தமிழ் இனத்தின் விடுதலைக்குப் பல பணிகள் புரிந்த சிவநாயகம் பல கஷ்டங்களையும் அனுபவித்தார். இன்று இலண்டனிலிருந்து Hot Spring ஆங்கில வெளியீட்டை சிறப்பாக நடத்துகின்றார். அவர் அமைதியாக இருந்து பணி செய்ய ஆண்டவன் சுகத்தை அளிக்க வேண்டும் என்று வாழ்த்தினார் டாகடர்.

தமிழ் ஈழப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த திரு ஈழவேந்தன், திரு கோவை மகேசன், செந்துாராசா சிவகுமாரன் போன்ற பலரை தனது நினைவிலிருந்து குறிப்பிட்ட டாக்டர் தருமலிங்கம் அவர்கள் இளைஞர்களுடைய ஆயுதப் போராட்டத்திற்கு எவ்வாறு இரகசியமாக உதவினார்கள் என்பதையும் கூறினார். அந்தப் பிள்ளைகள் நடத்திய போராட்டங்களுக்கு தன்னால் இயன்றளவு உதவி செய்தேன் என்று 87 வயதிலும் அந்த நினைவுகளைக் கூறி பெருமிதம் அடைந்தார்.

ஈழ வேந்தன் தமிழினத்திற்காக பல பணிகள் செய்து வருகிறார். தன்னுடன் நீண்ட கால தொடர்புள்ள சிலர் யாழ்ப்பாணத்தில் தன்னை அடிக்கடி சந்தித்து ஈழப் போராட்டம் பற்றி உணர்வூ ட்டுவதையும் கச்சிதமாக கூறிய டாக்டர் 'வீரவேங்கை' ஆசிரியராக இருந்து மறைந்த கோவை மகேசன் அவர்களையும் நினைவு படுத்தினார். திரு. கோவை மகேசன் எழுத்தால் தமிழ் ஈழ உணர்வுகளை இளைஞர்களுக்கு ஊட்டியதையும் மிக உற்சாகமாக கூறினார்.

திரு. கோவை மகேசனுடன் நெருக்கமாக பழகிய இவர் அவர் மறைவால் பெரும் துயர் அடைந்தார். எவருடைய உதவியுமில்லாது கோவை மகேசனின் மனைவிக்கு உதவியளிப்பதில் தனது கவலையை மாற்றிக் கொண்டார் டாக்டர் அவர்கள். இன விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த ஒருவனின் குடும்பம் கஸ்டப்படக் கூடாது என்று நல்ல உள்ளம் கொண்ட டாக்டர் தருமலிங்கம் திருமதி கோவை மகேசனுக்கு தொடர்ந்து பண உதவி செய்வதில் ஆர்வம் கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணம் நூல் நிலையம் எரிந்த வரலாற்றையும் நினைவு படுத்தினார். அந்நூல் நிலையம் எரிந்து கொண்டிருந்ததை நேரில் கண்ட இவர் அந்த வேதனை பொறுக்க முடியாது உயிர் நீத்த கிறிஸ்தவ பாதிரியார் பற்றியும் குறிப்பிட்டார்.

## பளையில் தென்னம் தோட்டம்

தமிழர் தனது பொருளாதாரத்தை தானே உருவாக்க வேண்டும். தன் கையே தனக்குத் துணை என்று அடிக்கடி கூறும் டாக்டர் தருமலிங்கம் தமது 18 வயதில் பளையில் தென்னம் தோட்டம் ஒன்றை ஆரம்பித்து வெற்றி கண்டதை இன்றும் பெருமையடன் நினைவு படுத்தினார். பளையில் உருவாக்கிய தென்னம் தோட்டத்திற்கு வாரம் தோறும் செல்வதையும் விடுமுறை நாட்களில் அத்தோட்டத்தில் வேலை செய்வதில் கண்ட இன்பத்தையும் அவரால் மறக்க முடியவில்லை. 1983ல் தான் சிறைக்கு சென்ற பின்னர் தென்னம் தோட்டத்திற்கு நடந்த நிலை பற்றி தெரியவில்லையென்றார். ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் அக்காணியில் இருப்பதை அறிந்து சந்தோஷப்பட்டதாகக் கூறினார்.

## ஆஸ்திரேலியாவில் தென்னம் தோட்டம்

பளையில் தென்னம் தோட்டம் உருவாக்கிய அனுபவத்தினால் சென்றவிடமெல்லாம் அதை உருவாக்க வேண்டும் என்று ஆவல் கொண்ட இவர் ஆஸ்திரேலியாவில் தனது மகளுடனும் உறவினருடனும் இருந்த போது அங்கு ஒரு தென்னம் தோட்டம் உருவாக்கியதையும் குறிப்பிட்டார்.

## வல்லைவெளி கைத்தெறி தொழிற்சாலை

யாழ்ப்பாணம் வல்லை வெளியில் அமைந்திருந்த பிரசித்தி பெற்ற வல்லைக் கைத்தறி புடவைத் தொழிற்சாலை இயக்குநராக பல வருடங்கள் பணியாற்றியவர். தமிழர்களின் சுதேசிய பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இத்தொழிற்சாலை தமிழ் ஈழத்தில் பிரசித்தி பெற்ற ஒன்றாகத் திகழ்ந்தது. மக்கள் பலரின் முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சாலை தந்தை செல்வாவினதும், தமிழரசுக் கட்சியினதும் பேராதரவுடன் இயங்கி வந்தது.

தமிழரசுக் கட்சியில் முக்கிய ஆதரவாளராக விளங்கிய டாக்டர் தருமலிங்கம் அவர்கள் தமிழரசுக் கட்சியின் சின்னம் பொறித்த சால்வைகள், துவாய்கள், கட்சியின் மூவர்ணக் கொடிகள் ஆகியன இத்தொழிற்சாலையிலிருந்து உற்பத்தி செய்ய வழி செய்தார். இத்தொழிற்சாலையில் பலருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதில் தீவிரமாக உழைத்தார்.

பொறுப்பேற்ற பணியைத் திறம்படச் செய்வதில் பொறுப்புணர்வும், திறமையும் மிக்க இவர், தமது சொந்த மருத்துவ மனை வேலைப் பழுவுடன் பாரிய கைத் தொழிற்சாலையை சிறப்பாக இயக்குவதில் வெற்றி கண்டவர்.

தந்தை செல்வாவின் விருப்பத்தின் பேரில் யாழ்ப்பாண மாநகர மேயராக பணியாற்றிய காலத்தில், நிருவாகத்தை மட்டுமன்றி, அபிவிருத்தி வேலைகளையும், பல எதிர்ப்புகளிடையிலும் திறம்பட செய்து மக்கள் மதிப்பைப் பெற்றவர்.

மருத்துவ டாக்டர் படிப்பை முடித்துக் கொண்டு ஆரம்பத்தில் அரசு மருத்துவ சாலைகளில் பணியாற்றியதாக தனது நினைவிலிருந்து பலவற்றைக் குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் முல்லைத் தீவிலும், பின்னர் அங்கொடை மனநோயாளர் வைத்தியசாலையிலும் பணியாற்றியதாக கூறிய இவர், அவ்வைத்திய சாலையில் தனக்கு ஏற்பட்ட நெருக்கடியையும் கரச்சலையும் குறிப்பிட்டார்.

சிங்களத் தொழிற்சங்கவாதியான ஏ. ஈ. குணசிங்காவினால் தனக்கு ஏற்பட்ட வகுப்புவாத அடிப்படையிலான தொல்லைகளையும், இழைக்கப்பட்ட தொந்தரவுகளையும் நினைவு கூறினார். தொழிற்சங்கத்தை வகுப்புவாத கண்ணோட்டத்தில் நடத்திய திரு, குணசிங்கா தமிழ் ஊழியர்களுக்கும், மலையாள தொழிலாளர்களுக்கும் எதிராக வகுப்புவாத பூ சலை வளர்த்து வந்தவர். இலங்கை சுதந்திரமடையு முன்னரே வகுப்பு வாத உணர்வுகளை தொழிலாளர்களுக்கு ஊட்டியவர் தொழிற்சங்கவாதி திரு. குணசிங்கா.

அங்கொடை மனநோயாளர் வைத்திய சாலை நோயாளர் தனக்கு கொடுத்த மதிப்பாலும், ஆதரவாலும் சில காலம் பணியாற்ற முடிந்தது என்றார். 1949ல் சிங்கள பகுதிகளில் பணியாற்றிய போது சிங்கள வகுப்புவாதிகளால் தனக்கு ஏற்பட்ட அனுபத்தையம் கசப்புணர்வையும் பற்றிக் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அந்த வைத்திய சாலையில் பணியாற்ற முடியாததால் பதவியை மூன்று மாதத்தில் கைவிட்டதாகக் குறிப்பிட்டார் டாக்டர் தருமலிங்கம். பின்னர் பதுளை ஆஸ்பத்திரியில் பணியாற்றிய காலத்தில் ஏற்பட்ட சம்பவங்களையும் குறிப்பிட்டார். அங்கு பணியாற்றிய காலத்தில் றக்குவானை ஆஸ்பத்திரியில், தொற்றுநோயினால் பலர் உயிர் இழக்க நேரிட்ட போது, ஏனைய டாக்டர்கள் அவ்விடத்தை விட்டு ஓட தான் மட்டும் மனிதாபிமானத்துடன் அங்கு நின்று பணியாற்றி பல சிங்கள நோயாளிகளின் உயிர்களைக் காப்பாற்றியதையும் நினைவிலிருந்து குறிப்பிட்டார்.

மருத்துவத் தொழிலை கடமையுணர்வோடு புரிந்த இவர் அரசு வைத்திய சாலைகளில் தொடர்ந்து பணியாற்ற பல வாய்ப்புகள் இருந்தும், டாக்டர் தருமலிங்கம் ஐயாவின் தமிழ் உணர்வும், சுயசிந்தனையும், எவருக்கும் அடிமையாக இருக்கக் கூடாது என்ற தன்மான

உணர்வினாலும், தனியான ஒரு வைத்தியசாலையை தமிழ் ஈழத்தில் உருவாக்க வேண்டும் என்று 1951ல் உணர்ந்தார்.

தன்னம்பிக்கையும் பற்றுணர்வும் கொண்ட இவர் 1951ல் டாக்டர் தருமலிங்கம் வைத்தியசாலையை யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கருகாமையில் ஸ்தாபித்தார். இவருடைய இந்தப் பெரும் முயற்சிக்கு அவரது துணைவியார் சுந்தரவல்லி தோன்றாத் துணையாக இருந்து நல்கிய உதவிகள் மருத்துவ மனையை சிறப்புடன் நடத்த முடிந்தது என்பதையும் கண்ணீர் ததும்ப டாக்டர் குறிப்பிட்டார்கள். அவரது துணைவியாரும் மருத்துவ டாக்டர் சரவண முத்துவின் மகள். அவர் அடிப்படை மருத்துவ அனுபவத்துடன் வளர்ந்தவர். திருமதி சுந்தரவல்லியின் ஒத்துழைப்பும் ஒத்தாசையும் இவர் நிறுவிய தனியார் வைத்தியசாலையை வெற்றியுடன் நடத்த முடிந்தது என்றார்.

அவருடைய வாழ்நாள் முழுவதும் இணைபிரியாது உறுதுணையாகவிருந்து ஒளி விளக்காக வாழ்ந்த வாழ்க்கைத் துணைவி 04.05.97ல் சிவபதம் அடைந்த செய்தி டாக்டரை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. தனது அருமைத்துணைவியாரின் பிரிவைத் தாங்க முடியாத நிலையில் கண்ணீர் ததும்ப கவலையுடன் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில் டாக்டர் திரு. தருமலிங்கம் வைத்தியசாலை

1951ல் அரசு சேவையிலிருந்து இளைப்பாறிய பின் நிறுவிய தனியார் வைத்தியசாலையில் நிறையப் பணம் சம்பாரித்தார். பணத்தைச் சுகபோக வாழ்விற்கு செலவு செய்யாதபடி தனது நான்கு பெண் பிள்ளைகளின் படிப்புக்காக நன்றாக செலவு செய்தார். தன்னைப் போன்றும் தனது துணைவியாரின் பரம்பரை போன்றும் பிள்ளைகளை மருத்துவத் துறையில் படிக்க செய்தார். அவர்களுக்கு வாழ்க்கைத் துணைவர்களாக மருத்துவ டாக்டர்களைத் திருமணம் செய்து கொடுத்து மன நிறைவு பெற்றார். மருமக்களாக வந்த மருமக்கள் அனைவரும் டாக்டர் தருமலிங்கம் அவர்களை மாமனார் போல் அன்று தங்கள் தந்தை போன்று நேசித்து, ஆண் பிள்ளைகளைப் பெறாத குறையை நீக்கினார்கள்.

பிள்ளைச் செல்வம், பணச்செல்வத்துடன் வாழ்ந்து வந்த டாக்டர் அவர்கள் 32வருடங்களாக யாழ்ப்பாண மண்ணில் வாழ்ந்தவர். யாழ்ப்பாணத்திலுள்ள பிரசவ வைத்தியசாலை மூலம் பலருக்கு சிறந்த பணியாற்றிய இவர் ஏழைகளுக்கு தன்னாலான இலவச வைத்திய சேவையாற்றி யாழ் மக்களின் மக்காப் புகழ் பெற்றிருந்தார்.

டாக்டர் தருமலிங்கம் ஐயாவிடம் ஊறிப் போய் இருந்த தமிழ்ப்பற்று, மருத்துவத்தொழிலோடு, சமூக, பொருளாதார, அரசியல் பணிகளிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். தமிழருக்கு ஒரு தனிநாடு வேண்டுமென்ற தீராத தாகம் கொண்ட இவர், தமிழ் ஈழப்போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட இளைஞர் அமைப்புகளுக்கு மறைமுகமாக நிறையப் பண உதவி நல்கி இளைஞர்களின் பேராதரவைப் பெற்றிருந்தார். இளைஞர்களின் தீவிர போக்கை உரமாக ஆதரித்த இவர் அவர்களின் போராட்டங்களுக்கு ஆதரவு நல்கி வந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பத்தில் தீவிரமாக ஆதரித்து வந்த டாக்டர்

தமிழ் இளைஞர் பேரவையில் டாக்டர் தர்மலிங்கம் அவர்களும் இலங்கை அரசின் தரைப்படுத்தல் கொள்கையால் தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார். உயர் கல்வியினால் பாதிக்கப்பபட்ட படித்த இளைஞர்கள் சிங்கள அரசின் கொடுமையான தரைப்படுத்தலை எதிர்க்க அணி திரண்டனர். 1970ல் தமிழ் மாணவர் பேரவை உதயமாகியது. மாணவர் பேரவையின் வளர்ச்சிக்கு மறைமுகமாக உதவி வந்தார் டாக்டர் தருமலிங்கம் அவர்கள். இவ்வமைப்பு ஆயுதப்போராட்ட நிலைக்கு வளர்ச்சி பெற்ற போது, அதனையும் ஆதரித்தார்.

இனவெறி பிடித்த சிங்கள அரசின் பயங்கரவாத நடவடிக்கைக்கு தமிழ் இளைஞர்களின் ஆயதப் போராட்டம் அவசியம் என்பதை உணர்ந்தார். தந்தை செல்வா 30 வருடங்களாக அகிம்சை வழியில் அறப்போராட்டம் நடத்தி சிங்கள அரசு தமிழர் உரிமைகளை வழங்க முன் வரவில்லை. இதை நன்கு உணர்ந்த டாக்டர்கள் அவர்கள் வேறு வழியின்றி இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்க முற்பட்டார். 1983 ல் சிங்கள அரசினால் சிறைப்படுத்தப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைபட்டிருக்கும் வரை இளைஞர் அமைப்புகளின் ஆயுதப் போராட்டத்திற்கு பல்வேறு வழிகளிலும் ஆதரவு நல்கி வந்தார்.

## சிவகுமார் போன்றவர்கள் எமக்கு கிடைத்த சொத்துக்கள்

உரும்பிராய் சிவகுமாரனின் 20 ஆண்டு நினைவு விழா 1995 யூ லையில் இலண்டன் தமிழ் தகவல் நடுவம் தலைவர் திரு. சிவஞானம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் டாக்டர் தருமலிங்கம் ஐயா அவர்கள் சிவகுமாரன் வீரப்போராட்டம் பற்றி கூறிய கருத்துக்கள்.

"நான் சிவகுமரனை 1974ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போது சந்தித்தேன். அன்றிலிருந்து அவருடன் சினேகிதமாக இருந்தேன். அவர் தான் செய்யும் காரியங்களை இரகசியமாக கதைக்க வருவார். அவருடைய துணிவையும் துணிச்சலையும் மன உறுதியையும் கண்டு கொண்டேன். என்ன உதவி கேட்டாலும் செய்யத் தயாராக இருந்தேன். சிவகுமார் என்ன செய்தார் என்று கேட்டால் தமிழருக்கு சிங்கள அரசு இழைக்கும் அநீதிகளையும் கொடுமைகளையும் நன்கு உணர்ந்து தன்னைத் தியாகம் செய்ய முன் வந்தார். சிவகுமாரன் உருவாக்கிய விடுதலைப் போராட்ட உணர்வை எத்தனை வருடங்கள் சென்றாலும் அழித்து விட முடியாது. மாணவர் பேரவையின் செயற்பாட்டுக்குத் தூண்டு கோலாக இருந்தவர் மாணவர்களிடையே புதிய எழுச்சியையும் சிந்தனையையும் உருவாக்கியவர் 20 ஆண்டுகள் கழித்தும் அவர் உருவாக்கிய ஆயுதப் போராட்டம் வியக்கத்தகு அளவில் வளர்ச்சியடைந்துள்ளது.

தமிழ் இனம் விடுதலை பெறுவதற்கு ஆயுதப் போராட்டம் வியக்கத்தகு அளவு வளர்ச்சியடைந்துள்ளது. தமிழ் இனம் விடுதலை பெறுவதற்கு ஆயுதப் போராட்டம் தான் ஒரு வழி என்ற முடிவுக்கு வந்த இளைஞன். தன் மானத்தோடு தன் உயிரை இழந்தவர், உடல் மண்ணுக்கு உயிர் தமிழ் இனத்துக்கு என்று விட்டுச் சென்றவர். இப்படி எத்தனையோ பிள்ளைகள் உயிரைத் தியாகம் செய்து விடுகின்றனர்' என்றார்.

## டாக்டரின் வீட்டில் இரகசிய அரசியல் கூட்டம்

இவருடைய மாட்டின் வீதி இல்லம் இரகசிய அரசியல் கூட்டங்கள் நடத்துவதற்கு மறைவிடமாக இருந்தது பலருக்குத் தெரியாது. அன்றைய கால கட்டத்தில் எங்காகுதல் அரசியல் கூட்டம், இளைஞர்களின் சந்திப்பு நடந்தால், பொலிசார் மணந்து பிடித்து விடுவார்கள். ஆனால் டாக்டர் தருமலிங்கம் ஐயாவின் இல்லம் இத்தகைய கூட்டங்களுக்கு பாதுகாப்பான இடமாக இருந்தது. மருத்துவமனை சேவையாலும், பொதுப்பணிகளினாலும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த டாக்டர் அவர்கள் இல்லத்தை நாடி பொலிசார் அதிகம் செல்வதில்லை. ஆனால் திரு ஈழவேந்தன், திரு கோவை மகேசன் போன்ற தீவிர வாதிகளின் உந்துதலினால் ஆரம்பிக்கப்பட்ட ஈழ விடுதலை முன்னணிக்கு தலைவராக வந்த பின்னர் பொலிசார் கண்ணோட்டம் அவர் இல்லத்தை நாடியது.

இந்த அரசியல் அமைப்பை உருவாக்கி தமிழர்களிடையே அரசியல் குழப்பத்தை உருவாக்கியவர்கள், அமைப்பையும் வளர்க்கவில்லை. தமிழ் ஈழவிடுதலைக்கு ஆக்கபூ ர்வமான பணி எதுவும் ஆற்றவில்லை. இப்பொழுது இந்த அரசியல் அமைப்பு ஒரு தனி மனிதனின் இயக்கமாக சென்னையில் இயங்குவதாக அறியக்கிடக்கிறது. நல்ல உள்ளமும் சிறந்த முறையில் தமிழர் விடுதலைக்கு நிறைவான பணியாற்றி வந்த டாக்டர் அவர்களை, இந்த தீவிரவாதிகளினால் சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்தது போல், தேவையற்ற அரசியல் அமைப்பால் டாக்டர் அவர்களுக்கு பெருந் தலையிடியை ஏற்படுத்தியதை நாம் அறிவோம்.

# யாழ்ப்பாண நூல்நிலையம்

யாழ்ப்பாண நூல் நிலையம் எரிந்த சம்பவம் டாக்டர் தருமலிங்கம் ஐயா அவர்களால் தாங்க முடியாத ஒன்றாக அவரது உள்ளத்தில் பதிந்து விட்டது. பெருமதிப்பு வாய்ந்த, தேடி எடுக்க முடியாத மதிப்பு மிக்க 97, 000 நூல்கள் அழிந்தது சகிக்க முடியாத ஒன்று என்றார்.

தமிழர்களின் சொத்து கல்வி. யாழ் நூல் நிலையம் தமிழர்களின் அறிவுக்களஞ்சியம், தென்கிழக்காசியாவிலேயே சிறந்த நூல் நிலையம் என பெயர் பெற்றது. தமிழர்களின் கல்வியை அழிக்க சிங்கள அரசின் உதவியுடன் இந்நூல் நிலையம் எரிக்கப்பட்டதை கண் கலங்க டாக்டர் குறிப்பிட்டார். வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் இது போன்ற ஒரு நூல் நிலையத்தை உருவாக்க தொடர்ந்து முயற்சி எடுக்க வேண்டும் என்று கூறிய அவர் முன்னோடியாக அதற்கு வித்திட்டார். தமிழருக்கு ஒரு தனியாட்சி கிடைத்தவுடன் யாழ்நூல் நிலையம் பெரிய அளவில் அமைய வேண்டும் என்ற ஆசை அவரிடம் வலுப்பெற்றிருந்தது.

நான் 1991ல் தமிழ் தகவல் நிலையத்தில் பணியாற்றிய காலத்தில் யாழ் நூல் நிலையம் பற்றியும் அழிக்கப்பட்ட நூல்கள் பற்றியும் அடிக்கடி நினைவு படுத்துவார். வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நூல்களைச் சேர்த்து வைக்க வேண்டும். இலண்டனில் வாழும் தமிழர்களின் வீடுகளில் பல்வேறு நூல்கள் உண்டு. அவற்றையெல்லாம் இப்போதிருந்தே சேர்த்து ஒரு இடத்தில் வைக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுவார். அவர் கூறும் ஒவ்வொன்றையும் செயற்படுத்துவதில் அவருக்கு நிகர் அவர் தான். தான் தற்போது இருக்குமடம் பிறன்வூ ட் இல்லத்தில் தானும், தனது மருமகன் டாக்டர் நவரத்தினம் அவர்களும் சேர்த்து வைத்திருக்கும் நூல்களை அன்பளிப்பாகத் தருவதாகக் கூறி, அவற்றை தமிழ்த்தகவல் நிலையத்தில் சேர்த்து வையுங்கள் என்று எனக்கும் நந்த குமாருக்கும் அடிக்கடி கூறுவார்.

வெளிநாடுகளில் நூல் சேர்க்கும் பணியை ஆரம்பித்து வைக்க வேண்டும் என்ற அவரது ஆலோசனையைச் செயற்படுத்துவதற்கு துடியாகத் துடித்தார். நானும், திரு வரதகுமார் அவர்களும் டாக்டர் தருமலிங்கம் ஐயா வீட்டிற்குச் சென்று அந்நூல்கள் எல்லாவற்றையும் 1992ல் எடுத்து வந்து தமிழ்த் தகவல் நடுவத்தில் பாதுகாப்பாக வைத்தோம். அதனால் அவர் பூ ரிப்படைந்தார். தொடர்ந்து இந்தப் பணியைச் செய்யுங்கள் என்று உற்சாகம் ஊட்டினார். தமிழ் நடுவத்தினருக்கு இப்பணியைத் தொடர விருப்பம். ஆனால் நூல்களைச் சேர்த்து முறையாகப் பேணிப் பாதுகாக்க இட வசதி இல்லாததால் அப்பணியைத் தொடர முடியாத நிலையில் உள்ளது. தூய சிந்தனை, தூய உள்ளம், தூய்மையான அவரது நோக்கத்தை நிறைவேற்ற டாக்டர் தருமலிங்கம் ஐயா அவர்களது நினைவாக நல்ல உள்ளம் படைத்த தமிழர் எவராகுதல் முன் வந்து ஓர் கட்டிடத்தைத் தந்து உதவ வழி செய்வார்களேயானால், தமிழர்களின் கல்வி உயர்வுக்கு செய்த மறக்க முடியாத என்றும் நினைவிருக்கக் கூடிய சேவையாகும்.

# வெலிக்கடைச் சிறையில் டாக்டர் தருமலிங்கம்

அமைதியாகவும், அடக்கமாகவும், பெருமதிப்புடனும் தமிழ் இனத்திற்கு பணிபுரிந்து வந்த டாக்டர் ஐயா அவர்கள் வெலிக்கடைச் சிறைச்சாலையிலும், மட்டக்களப்பு சிறைச்சாலையிலும் சிலகாலம் சிறைப்படுத்தப்பட்டிருந்தவர்.

அவர் வெலிக்கடைச் சிறையிலிருந்த காலத்தில் 1983 யூ லை 27 ல் 53 தமிழ் சிறைக்கைதிகள் அடித்துக்கொல்லப்பட்ட சம்பவங்கள் அனைவரும் அறிந்ததே. அந்தக் கொடூர சம்பவங்களை நேரில் கண்டவர். டாக்டர் அவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினார். அவர் உயிர் தப்பியதால் 53 தமிழ்ச் சிறைக்கைதிகள் சிங்கள குண்டர்களினாலும், சிங்களக்கைதிகளினாலும் கொலை செய்யப்பட்ட கொடூர சம்பவத்தை வயது முதிர்ந்த நிலையிலும் கூறினார்கள்.

தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த பிரமுகர்களான குட்டிமணி, ஜெகநாதன் முதலில் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அவ்விருவரும் கொல்லப்படுவதற்கு முன் முழங்காலில் நிற்கப்பணிக்கப்பட்டனர். அவர்கள் கண்கள் இரும்புக்கம்பிகளால் தோண்டப்பட்டன. ஒரு பாதகன் குட்டிமணியின் நாக்கை வெட்டி, அதிலிருந்து கொட்டிய இரத்தத்தைக் குடித்துக் கொண்டே 'நான் ஒரு புலியின் இரத்தத்தைக் குடித்து விட்டேன்' எனக் கத்தினான்.

இவர்கள் முதலில் கொலை செய்யப்பட்ட பின்னர் மற்றும் ஏழு பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் கொல்லப்பட்டனர். மேல் மாடிச் சிறையில் தங்கியிருந்த டாக்டர் இராஜசுந்தரம் காந்திய இயக்கத்தலைவர் — வனபிதா சிங்கராஜா ஆகியோருடன் தானும் மற்றும் பலரும் சிறையில் இருந்ததாகக் கூறினார்.

கீழ் மாடியிலிருந்தவர்கள் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட பின்னர் தங்களை நாடி தாக்கவரும் என்று எதிர்பார்த்து, தங்களைப் பாதுகாத்துக்கொள்ள தயார் நிலையிலிருந்ததாகக் கூறும் டாக்டர் தருமலிங்கம் ஐயா அவர்கள் — டாக்டர் இராஜசுந்தரம் அவர்களுக்கு நேர்ந்த மரணத்தை மிக்க துக்கத்துடன் குறிப்பிட்டார். தங்களைத்தாக்க வருபவர்களை எதிர்ப்பதில் துணிவு கொண்ட டாக்டரும் மற்றையோரும் அங்குள்ள மேஜைக்கால்களையும், கதிரைகளையும் கையில் எடுத்து எதிர்தாக்குதலுக்குத்தயாராக இருந்த துணிவையும் குறிப்பிட்டார். மேல் மாடித்தமிழ்க் கைதிகளைத் தாக்க காடையர் கூட்டம் வந்தது. அறைப்பூ ட்டுக்களை உடைத்தனர். டாக்டர் இராஜசுந்தரம் கதவருகில் போய் நின்று 'ஏன் எங்களைக் கொல்கிறீர்கள்? நாங்கள் உங்களுக்கு என்ன செய்தோம்?' என்று கேட்டார். அவ்வேளை கதவு உடைக்கப்பட்டது. ஒருவன் டாக்டரின் தலையில் இரும்புக்கம்பியால் ஓங்கி அடித்தான். இரத்தம் சீறிப் பல அடி தூரம் பாய்ந்தது.

இக்கட்டத்தில் எங்களைப்பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தோம். வெளியில் இருந்த இரண்டு மேதைகளின் கால்களை உடைத்து எடுத்துக்கொண்டு எதிர்க்கத் தாயாரானோம் என்றார் டாக்டர். அவர் மேலும் கூறினார் "அவர்கள் செல்கட்டிகளை எங்கள் மேல் எறிந்தார்கள். நாங்கள் அவற்றை எடுத்துத் திருப்பி எறிந்தோம். விறகு தடிகளும், கம்பித் துண்டுகளும் எறியப்பட்டன. அவற்றை எடுத்து ஆயத்தமாக வைத்துக் கொண்டோம். அரை மணி நேரம் இச்சண்டை நடை பெற்றதாகக் கூறினார். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அங்கு வந்த இராணுவத்தினர் கண்ணீர்ப்புகை அடித்தனர். அதனால் நிலைமை சீர் அடைந்தது. தாம் உயிர் தப்பியதாகக் கூறினார். நிலைமை மோசமாக இருந்ததால் எஞ்சிய தமிழ்க் கைதிகளுடன் தானும் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அங்கு பல மாதங்கள் சிறையில் இருந்த சம்பவத்தையும்கூறினார்.

# டாக்டர் தருமலிங்கமும் நானும்

டாக்டர் தருமலிங்கம் ஐயாவுடன் யாழ்ப்பாணத்திலும் இலண்டனிலும் நீண்ட கால தொடர்புள்ள எனக்கு அவரது நற்குணங்களையும் தன்னலமற்ற பணிகளையும் நன்கு அறிவேன். நான் யாழ்ப்பாணத்திலிருந்த காலத்தில் இவரது மாட்டின் வீதியிலுள்ள இல்லத்திற்கு அடிக்கடி செல்வது வழக்கம். ஈழவேந்தன், கோவை மகேசன், செந்துாரராஜா, இறைகுமரன் மற்றும் இளைஞர் பேரவையைச் சேர்ந்தவர்கள் அவர் இல்லத்தில் அடிக்கடி கூட்டம் நடத்துவார்கள். திருமதி சுந்தரவல்லி தர்மலிங்கம் தேனீர் வழங்கி உபசரிப்பது வழக்கம்.

நான் இலண்டன் நாட்டிற்கு வந்த போது 1991லிருந்து என்னுடன் அடிக்கடி தொடர்பு கொள்வார். 1991லிருந்து ஒன்றரை வருடங்களுக்கு மேலாக தமிழ் தகவல் நடுவத்தில் பணியாற்றிய காலத்தில் கிழமைக்கு நான்கு தடவைகள் என்னுடன் தொடர்பு கொள்வார். தோலைபேசியில் அவர் கேட்பவை –

"நாட்டில் என்ன நடக்கிறது? பொடிகளின் போராட்டம் என்ன மாதிரி, சிங்கள ராணுவத்தின் கொடுமைகளை இந்தப் பிள்ளைகள் எப்படி சமாளிக்கிறார்கள்? இங்கிருந்து கொண்டு நாங்கள் என்ன செய்கின்றோம். ஏதாகிலும் செய்ய வேண்டும். எனக்கு இப்பொழுது ஒரு செய்தி கிடைத்தது உண்மையா? என்று ஐயாவிடம் தெளிவார்.

இப்படி நாட்டைப்பற்றியும், தமிழ் மக்கள், இளைஞர்களின் போராட்டம் பற்றியே தொலைபேசியில் கதைப்பார். அதற்கு உற்சாகம் அளித்துக் கொண்டே இருப்பார். நீண்ட நேரம் தமிழ் ஈழப்பிரச்னைகளைப் பற்றியே உரையாடுவார். டாக்டர் அவர்கள் நடந்து திரியக் கூடிய காலத்தில் ஊர்வலங்கள் கூட்டங்களில் பங்கு கொள்ளத் தவறுவதில்லை.

தன்னால் எழும்பி நடந்து பிரயாணம் செய்யக் கூடியவரையும் எவரது உதவியும் இன்றி, சுரங்கப் புகைவண்டி, பஸ் மூலம் எல்லா இடங்களுக்கும் ஓடித்திரிவார். விடுதலைப் புலிகளின் அலுவலகம் மத்திய இலண்டனில் இருந்த காலத்தில், அந்த அலுவலகத்திற்கு அடிக்கடி செல்வார். அப்பொழுது இலண்டன் பொறுப்பாளராக இருந்த தளபதி கிட்டு அவர்களை சந்தித்து உரையாடுவார். அவர் கேட்கும் உதவிகளைச் செய்யத் தவறுவதில்லை. அந்த அலுவலகம் சென்று அருகிலுள்ள தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு அலுவலகத்திற்கு செல்வதற்குத் தவறுவதில்லை. அங்கு பணியாற்றுபவர்களுடன் அகதிகள் பிரச்னைகள் பற்றி கதைப்பார்.

பல வசதி வாய்ப்புக்களுடன் பிரட்வூ ட் என்னும் இடத்திலும் அருமை மகளுடனும் பெரும் குணம் படைத்த மதிப்புக்கும் மரியாதைக்குரிய மருமகன் ஆன டாக்டர் நவரத்தினம் அவர்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் இவர் பல சுகபோகங்களை அனுபவிக்கக்கூடிய நிலையிலும் எளிமையான வாழ்க்கையைக் கடைப்பிடித்து வாழ்ந்து வருகின்றார். தமிழர்கள் சுயமாக வாழ வேண்டும், தன் காலில் நிற்கப் பழக வேண்டும் நன்றும் தீதும் பிறர்தர வரா என்ற சித்தார்ந்தம் கொண்டுள்ள டாக்டர் தருமலிங்கம் அவர்கள் தமது வயது முதிர்ந்த நிலையிலும், சுதந்திர உணர்வு குன்றி விடவில்லை.

என்றும் எப்பொழுதும் ஈழத்தமிழர்கள் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும் டாக்டர் அவர்களுக்கு 87 வயதாகி விட்டது. தள்ளாடும் வயதிலும் தமிழ் ஈழ உணர்வுடனும், தமிழ் ஈழச் சிந்தனையுடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் டாக்டர் திரு தர்மலிங்கம் ஐயா அவர்கள் ஆரோக்கியமாக என்றும் பல்லாண்டு வாழ வேண்டுமென்று தமிழ் மக்கள் அனைவரும் பிரார்த்திப்போமாக.

# தந்தை செல்வாவும் டாக்டர் ஐயாவும்

தந்தை செல்வாவின் தொடர்பு 1984ல் ஏற்பட்டது. அக்காலத்திலிருந்து தந்தை செல்வாவுடன் 1997 வரையும் வலுவான உறவு இருந்து வந்தது. டாக்டர் ஐயாவின் யாழ்ப்பாண இல்லம் தமிழரசுக்கட்சியின் இரகசிய கூட்டங்கள் நடத்தும் இல்லமாக இருந்து வந்தது என்பது பலருக்குத் தெரியாது.

பிரபல பத்திரிகையாளரும், ஆரம்பகாலத்தில் தமிழ் அரசுக்கட்சியின் பிரசித்தி பெற்ற பேச்சாளராகவும் விளங்கிய மதிப்புக்குரிய பொன்பாலசுந்தரம் அவர்கள் டாக்டர் தருமலிங்கம் ஐயா பற்றி எழுதிய கட்டுரையில் அம்பலப்படுத்தியுள்ளார். யாழ்ப்பாணத்தில் ஒரு நம்பிக்கையும் விசுவாசமும் கொண்ட ஒருவராக தந்தை செல்வாவின் பெரும் மதிப்புக்குரியவராக விளங்கினார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சீறி எதிர்ப்புப் போராட்டம், சத்தியாக்கிரகப் போராட்டம் பாத யாத்திரை, போன்றவற்றிற்கு பின்னணியிலிருந்து பெரும் பணியாற்றி கொழும்புத்துறை தமிழ்ப்பாடசாலையில் ஆரம்ப கல்வியைத் தொடர்ந்த டாக்டர் ஐயா தென்பற்றிக் கல்லூரியில் எஸ். எஸ். சி வகுப்பு வரையும் படித்தார். பின்னர் சென்ஜோன்ஸ் கல்லூரியில் சிலகாலம் படித்தார். மருத்துவக்கல்வியை ஐந்து ஆண்டு கொழும்பு மருத்துவக்கல்லூரி படித்து முடித்தார். அதன் பின் அரசு மருத்துவமனைகளில் சிலகாலம் பணியாற்றினார்.

## டாக்டர் ஐயா

தந்தை செல்வா மீது அபரிமிதமான மதிப்பு வைத்திருந்தார். இருவரும் கொள்கையில் உறுதியும், தமிழீழர்களுக்கு தனி நாடு உருவாக வேண்டுமென்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள். அதனால் தந்தை செல்வாவின் நூற்றாண்டு நிறைவு விழாவும் டாக்டர் தர்மலிங்கம் ஐயாவின் 90 ஆண்டு நிறைவு விழாவும் மார்ச் மாதத்தில் நடைபெறுகின்றன. இருதயத்தில் உறுதியான தமிழ் ஈழப் போராட்டத்திற்கு இரு பெரியாரதும் நிறைவு விழாக்கள் மேலும் மெருகூட்டுவதாக அமைகின்றன.

# இல்லறம்

பொது வாழ்வில் பொறுப்பும் அக்கறையுடனும் உழைத்தது போல் குடும்ப வாழ்விலும் தனது பொறுப்புக்களையும், கடமைகளையும் சிறப்புடன் ஆற்றியவர்.

கட்டுடையைப் பிறப்பிடமாகக் கொண்ட சரவணமுத்து சுந்தரவல்லியைத் திருமணம் செய்து இல்லற வாழ்வில் புகுந்த இவர் நான்கு மகா இலட்சுமிகளுக்குத் தந்தையானார். தனது பிள்ளைகளை நன்கு படிக்க வைத்தார். நான்கு அருமையான மருமக்களை (மருத்துவத்துறை டாக்டர்களை) அவர்களுக்குத் துணைவர்களாக்கி அவர்கள் எல்லோரினதும் வாழ்வும் செழிப்புடன் மிளிர வைத்தார். திருச்செல்விகளாகிய தர்மாம்பாள், தர்மஜோதி, தர்மதேவி, தர்மவல்லி ஆகியோர் முறையே டாக்டர நவரத்தினம் (இலண்டன்) டாக்டர் பாலராமன், டாக்டர் விக்னராசா, டாக்டர் சத்தியமூர்த்தி ஆகியோரை அவர்களுக்குத் திருமணம் செய்து அவர்களது இல்லற வாழ்வை சிறப்புடன் அமைத்துக் கொடுத்தார்.

இவரது அருமை மகள் திருமதி தர்மவல்லி சத்தியமூர்த்தி டாக்டர் சத்தியமூர்த்தி 1990 ம் ஆண்டு மலேசியாவில் கோரவிபத்தில் சிக்குண்டு கோர மரணம் அடைந்த சம்பவம் இன்றும் டாக்டர் ஐயாவின் மனதை விட்டு அகலவில்லை.

ஏன் அப்படி வைத்திருந்தார்? என்று வினவிய போது அவர் கூறிய பதில் —

" எனது இல்லத்தை ஒரு பெரிய மாளிகையாக வைத்திருந்தால், எல்லா மக்களும் வந்து போக முடியாது. மக்கள் வருவதற்கு கூச்சப்படுவார்கள். தேவை உள்ள மக்கள் தன் இல்லத்திற்கு வந்து போக வேண்டும். அதற்கு ஏற்பதாகவே இல்லத்தை வைத்திருந்தேன்" என்றார். இதுவும் டாக்டர் ஐயாவின் தியாக உள்ளம் கொண்ட மனோநிலையை எடுத்துக்காட்டுகிறது.

☆☆☆☆☆☆☆☆☆☆☆

# நன்றிகள் உரித்தாகட்டும்



*தேசத்திற்கு உழைத்தவரை தேச விடுதலைக்கு உழைப்பவருடன் உறுதுணையாக நிற்பவரை தமிழீழ மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். இதற்கு உதாரணமாய் எங்கள் தமிழீழப் பெரியார் டாக்டர் தருமலிங்கம் ஐயாவுக்கு இந்த 90வது பிறந்த நாள் சேவை நலன் பாராட்டு விழாவை எடுத்தோம். இவ் விழா சிறப்புற உழைத்த அனைவருக்கும், உறுதுணை புரிந்த யாவருக்கும், வருகை தந்த எல்லோருக்கும், வரலாற்று ஆவணமாய் அன்னாரின் பெருஞ் சேவையில் சில துளிகளைச் சுமந்து வரும் சேவை நலன் பாராட்டு மலரை அழகுற அச்சேற்றி அச்சேற்றித் தந்த வாசன் அச்சகத்தினருக்கும் விழாக் குழுவினருக்கும் இதய நன்றிகளைத் தெரிவிப்பதில் பொருமகிழ்வு அடைகிறோம்.*

*வணக்கம்.*
*19.04.98*

For any information Please contact:

Publication Committee
Flat1 198 Neville Road
London E12 9QN
0181 471 2567
0956 657 852

**" The future will depend on the boys and the guns"**

*- Dr. S.A. Tharmalingam, 1983*





**From the interview given by him to leading Indian journalist M.J. Akbar in late 1983 when the latter met him in Jaffna. The interview appeared in the Calcutta magazine SUNDAY edited by Akbar at that time.**

அச்சுப் பதிப்பு வாசன் அச்சகம் 0181 646 2886